# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, சாலிஹியா தைக்கா (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(1998, யூன் மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1998, யூன் மாதம் 12 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 6.50** **தபாற் செலவு: ரூபா 2.50**

## 1998 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சாலிஹிய்யா தைக்கா (கூட்டிணைத்தல்) சட்டம்

*[1998 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச. வ.— ஓ. 58/93*

### சாலிஹிய்யா தைக்காவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

காயல்பட்டினத்தின் சங்கைக்குரிய கலிபாவான ஆரிபீன் மர்ஹூம் குத்புஸ்Zஸமான் சங்கைக்குரிய சேக்குல் வுஜூட் ஹாஜி வல் ஆரிப் ஷேக் அப்துல் காணி சாஹிபுல் குதிரிவார்—ரிபாய் (ரலியல்லாஹு அன்ஹு), குதிரியாதுல் சாலிஹிய்யா தரீக்கத்தின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு இஸ்லாமிய ஹிஜ்ரி ஆண்டான 1346 ஆம் ஆண்டுக்கு நேரொத்ததான 1925 ஆம் ஆண்டின்போது கொழும்பு 12, புதிய சோனக வீதியிலுள்ள 132 ஆம் இலக்கத்தில் "சாலிஹிய்யா தைக்கா"வைத் தாபித்தாராதலாலும் ; அடுத்துப் பின்னர் அல்—மத்ரஸதுஸ் சாலிஹிய்யா என்ற பெயர் மகுடத்தின்கீழ் இஸ்லாமியக் கல்வி நிறுவனமொன்று 1985, ஒற்றோபர் 16 ஆம் திகதியன்று சொல்லப்பட்ட "சாலிஹிய்யா தைக்கா"வில் தாபிக்கப் பட்டதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட சாலிஹிய்யா தைக்கா எக்குறிக்கோள் களுக்கும் கருமங்களுக்குமாக நிறுவப்பட்டதோ அக்குறிக் கோள்களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகர மாக நிறைவேற்றிக் கொண்டுநடாத்தி வந்துள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட "சாலிஹிய்யா தைக்கா" வின் முகாமைச்சபை கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண் ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்கான தாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

**1.** இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, சாலிஹிய்யா தைக்கா (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2-ஈ 034642 - 1,100 (94/12)

கொழும்பு சாலிஹியா தைக்காவைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் 'தைக்கா' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கொழும்பு "சாலிஹியா தைக்கா" வின் முகாமைச்சபையானது தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்க்கப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும், "சாலிஹியா தைக்கா" என்ற பெயர் மகுடத்தின்கீழ் (இதனகத்துப்பின்னர் 'கூட்டுத்தாபனம்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டும் ; அத்துடன், அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடரலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. (1) கூட்டுத்தாபனமானது அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) அரபுமொழியையும், இலக்கியத்தையும், இஸ்லாமிய மதத்தையும், சரித்திரத்தையும், பண்பாட்டையும், அவற்றின் எல்லாக் கோணங்களிலும் கற்பதனை மேம்படுத்துதலும், ஊக்குவித்தலும், மேலேயுள்ள விடயங்கள் பற்றி ஆராய்ச்சி நடாத்துதலும் ;

(ஆ) இஸ்லாமிய பண்பாட்டு, சமூக செயற்பாட்டிற்கான நிலையமாகத் தைக்காவை நிர்மாணித்தலும், மீளவமைத்தலும், பேணுதலும், பேணிக்காத்தலும் ;

(இ) தைக்காவுடன் இணைந்துள்ள ஸியாரத்தை மீளவமைத்தலும் பேணுதலும் ;

(ஈ) மௌலவிப் பரீட்சைகளிலும் அரசாங்கத்தினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏனைய பரீட்சைகளிலும் மாணவர்கள் தோற்றுவதை பயிற்சியளிக்கும் முகமாக "சாலிஹியா தைக்கா" என்ற பெயரின்கீழ் அரபு இஸ்லாமிய வகுப்புகளை நடாத்துதல் ;

(உ) முஸ்லிம்களுக்கு கல்வி வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஊ) மற்ற சமூக, கல்வி அத்துடன் மதச்செயற்பாடு களை மேம்படுத்தல் ;

(எ) மேற்சொல்லப்பட்ட குறிக்கோள்களை முன்னெடுத் துச் செல்வதற்கான கிளைகளைத் திறத்தல் ;

(ஏ) இஸ்லாம் பற்றிய புத்தகங்களை, சஞ்சிகைகளை, மாத வெளியீடுகளை அத்துடன் துண்டுப் பிரசுரங் களை அச்சிடுதலும், வெளியிடுதலும் விநியோகித் தலும் ;

(ஐ) முஸ்லிம்களிடையே இஸ்லாம் மதம் செயல் முறையில் அனுசரிக்கப்படுவதனை ஊக்குவித்தல் ;

(ஒ) நூல்களையும் வாசிப்பறைகளையும் தாபித்தலும், அவற்றுக்குச் சாதனமிடுதலும், அவற்றைப் பேணு தலும், இஸ்லாத்தின் கற்கையையும் பரப்புகை யையும் மேம்படுத்துதலும் ;

(ஓ) சாவிஹூரியா ராதிபையும் திக்ர் மஜ்லிஸையும் ஒழுங்குபடுத்துதலும் நடாத்துதலும் காதிரியதுஸ் ஸாலிஹூரியா தரீக்கத்தின் செயற்பாடுகளை மேம் படுத்துதலும் ;

(ஔ) மேற்சொல்லப்பட்ட குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எவற்றையேனும் எய்துவதன் இடை நேர்விளைவான அல்லது அதற்கு உகந்தனவான அத்துடன் இச்சட்டத்துக்கு அல்லது ஏதேனும் எழுத்திலான வேறு சட்டத்துக்கு முரணாகவிராத அத்தகைய எல்லாச் செயல்களையும், காரியங் களையும் செய்தல்.

(2) முதலாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட குறிக்கோள்கள், "இஸ்லாமிய சரீ அத்தின் சுன்னத் – வல் ஜமாஅத்"தின் கோட்பாடுகளுக்கு இணங்க கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அல்லது உசிதமானவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனமானது தத்துவமுடையதாதல் வேண்டும் ; இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்குப் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்குதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய, அத்தகைய விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்படக்கூடியவர்களான பதினேழு உறுப்பினர்களைக் கொண்டமைந்த நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையொன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நம்பிக்கைப் பொறுப்பாளர்சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னரான தேதியன்று பதவி வகிக்கின்றவர்களும் அவர்களின் பெயர்கள் இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவர்களுமான தைக்காவின் முகாமைச்சபையாகவிருத்தல் வேண்டும்.

(3) நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையுறுப்பினரொருவர் இறக்கும் பட்சத்தில், எஞ்சியுள்ள நம்பிக்கைப் பொறுப்பாளர்களுள் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் பெரும்பான்மையினால் வெற்றிடமானது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் நிரப்பப்படுதல் வேண்டும்.

6. (1) பொதுக்கூட்டமெதிலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மை கொண்டு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் கூட்டங்களில் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையைத் தெரிவுசெய்வதற்காகவும், அலுவல்களைக் கையாள்வதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், பொதுவில் வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும், அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும், இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும் அதேபோன்ற கூட்டமொன்றில் அதேபோன்ற முறையில், அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம், நீக்கப்படலாம் அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம். கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முன்னரான திகதியன்று வலுவிலுள்ள தைக்காவின் விதிகள், அவை இச்சட்டத்தினது அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகளெனக் கருதப்படல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் அனைவரும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

7. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முன்னரான நாளன்று தைக்காவுக்கு உள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் உருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், அத்தினத்தன்று தைக்காவுக்கு வருமதியான எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படற்பாலனவும், கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.

அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களைக் கூட்டுத்தாபனம் வைத்திருந்து கையாளலாம்.

8. கூட்டுத்தாபனமானது தற்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபன விதிகளுக்கமைய, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடைகள், கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாகவரக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கையேற்றுக்கொள்ளுதல் செய்துவைத்திருப்பதற்குச் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆதனங்கள் எல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையாகக் கையாளவுள்ள முழுத்தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டாத ஒழுங்கமைப்பாக விருத்தல்.

9. எங்கிருந்தேனும் பெறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனங்களும் இதன்கண் எடுத்துக்கூறப்பட்ட அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டுமென்பதுடன் அதன் எப்பாகமும், கூட்டுத்தாபன உறுப்பினர்களுக்குப் பங்கிலாபம், கடன் மிகையூதியம் என்ற வகையாக அல்லது இலாபம் என்றவகையாக எவ்விதத்திலேனும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலும் அல்லது கைமாற்றப்படுதலும் ஆகாது.

ஆயின், எவ்வாறாயினும் இப்பிரிவின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றைத் தடைசெய்தலாகாது :—

(அ) கூட்டுத்தாபனத்துக்கு அவரால் ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகளுக்காகக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினருக்கு, நல்லெண்ணத்துடன், நியாயமானதும் தகுந்ததுமான ஊதியத்தைக் கொடுப்பனவு செய்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால் அல்லது கூட்டுத்தாபன உறுப்பினரொருவர் பங்குதாரரொருவராகவுள்ள ஏதேனும் கம்பனியால் கூட்டுத்தாபனத்துக்கு வாடகைக்கு விடப்பட்ட வளவுகளுக்கு நியாயமானதும் தகுந்ததுமான வாடகையைக் கொடுப்பனவு செய்தல் ;

(இ) தமது பணிகளை அல்லது கடமைகளை நிறைவேற்றுவதில் அல்லது புரிவதில் அல்லது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதில் கூட்டுத்தாபன உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியர் எவரினாலும் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் அங்கீகாரத்தோடு பெறப்பட்ட நியாயமானதும் தகுந்ததுமான செலவுகளைத் திருப்பிக் கொடுத்தல் அல்லது மீளக்கொடுப்பனவு செய்தல்.

ஆதனங்களைக் கொள்ளுதல், நிதிகளை முதலீடு செய்தல், கடன்களைத் திரட்டுதல் முதலியவற்றுக்கான கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**10.** பின்வருவனவற்றைச் செய்தல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையாகத் தேவைப்படக்கூடியவையான காணிகளை அல்லது கட்டடங்களைக் கொள்வனவு செய்தலும், கொள்ளுதலும், வாடகைக்கெடுத்தலும், நிர்மாணித்தலும் அல்லது வேறுவகையாகப் பெறுதலும், உசிதமானதென அது கருதக்கூடியவாறாக அவற்றைக் கையுதிர்த்தலும் அல்லது கையாளுதலும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளைத் தகுதியென நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை எண்ணக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தலும், அத்தகைய எவையேனும் முதலீடுகளைக் காலத்துக்குக்காலம் வேறுபடுத்தலும் கைமாற்றுதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் நோக்கத்துக்காக பணம் திரட்டுதலும் அல்லது கடனெடுத்தலும், தகுதியென அது எண்ணக்கூடியவாறான அத்தகைய முறையில் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் கடனுக்கு அல்லது கடப்பாட்டுக்குப் பிணைப் பொறுப்பளித்து அதனைப் பொறுப்பு விடுவித்தலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்துக்காக, உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் எல்லா வகையினவையுமான ஒப்பப்பணங்களையும், மானியக்கொடைகளையும், நன்கொடைகளையும் அத்துடன் கொடைகளையும் பரிந்துகேட்டலும், திரட்டுதலும், பெறுதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப் பட்ட எவையேனும் கட்டிடங்களை நிர்மாணித்தலும், மாற்றியமைத்தலும் அல்லது பேணுதலும் ;

(ஊ) ஏதேனும் தரும நோக்கத்துக்காகப் பணத்தை ஒப்பப்பணமாகச் செலுத்துதல் அல்லது அளித்தல் ;

(எ) ஏதேனும் நிலஞ்சார் அல்லது ஆள்சார் ஆதனம் சம்பந்தமான எவையேனும் சட்டமுறையான நம்பிக்கைப்பொறுப்புக்களையும் நிபந்தனைகளையும் பொறுப்பேற்றலும், ஏற்றுக்கொள்ளுதலும், நிறை வேற்றுதலும், புரிதலும் அத்துடன் நிருவகித்தலும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்து வதற்கான கூட்டுத்தாபனத்தினால் ஆதரவளிக்கப் பட்டு நடாத்தப்பட்ட வெவ்வேறு செயற்பாடுகள், நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் என்பவற்றுக் கான வெவ்வேறு கிளைகளையும் நிறுவனங்களை யும் தாபித்தலும், ஒழுங்குபடுத்தலும், பேணுதலும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தால் காலத்துக்குக்காலம் தீர்மானிக் கப்படக்கூடியவாறாகக் கூட்டுத்தாபனத்தின் அலு வலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவையை முடிவுறுத்தலும் ; அத்துடன் அவர்களுக்கு அத்த கைய சம்பளங்கள், ஓய்வூதியங்கள், பணிக்கொடை, படிகள் என்பவற்றைச் செலுத்துதலும் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் கடந்தகால அல்லது தற் போதைய அலுவலர்களுக்கு அல்லது சேவையாளர் களுக்கு அல்லது அத்தகைய அலுவலர்களினதும், சேவையாளர்களினதும் உறவினர்களுக்கு அல்லது தங்கிவாழுநருக்குப் பணிக்கொடைகள், ஓய்வூதியங் கள், படிகள் அல்லது ஏனைய நன்மைகளை வழங்குவதற்கான ஏதேனும் நிதியத்தை அல்லது திட்டத்தைத் தாபித்தலும் அல்லது அந்த நிதியத் துக்கு அல்லது திட்டத்திற்கு உதவுதொகை செலுத் துதலும் ;

(ஓ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத எவரேனுமாளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் அல்லது ஏதேனும் நிணைக்களத்துடன் அல்லது உள்ளூரதிகாரசபையுடன் ஏதேனும் ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளுதல்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

*11.* கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபன விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களின் முன்னிலையிலன்றி, எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது ; அவர்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும் ; அவ்விதம் கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்று தனிவேறானதாதல் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

*12.* கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்துக்கு வருமதியாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணங்களின் தொகையை விஞ்சுகின்றதான ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

*13.* இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலாகாது அல்லது பாதிப்பதாதலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

*14.* இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பிரிவு 5 (2)

## அட்டவணை

1. ஜனாப் குண்டு அப்துல் காதர் அப்துல் வஹாப்
2. மர்ஹூம் அப்துல் மஜீத் முகம்மத் சித்தீக்
3. ஜனாப் அப்துல் காதர் முகம்மத் அலி
4. ஜனாப் ஹமீத் Zசைனுல் ஆப்தீன்
5. ஜனாப் ஓமர் கரேய்க் காமில்
6. ஜனாப் கௌZகல் ஹமீத் எஸ்.
7. ஜனாப் மீரா சாஹிப் சிப்லி சாஹுல் ஹமீத்
8. ஜனாப் சம்சுதீன் நஜிமுதீன்
9. ஜனாப் மீரா சஹிப் மொஹிதீன் அப்துல் காதர்
10. ஜனாப் முஹம்மத் ஹனீபா முகம்மத் மொஹிறுதீன்
11. ஜனாப் முஸ்தபா முகம்மத் Zகைபருன்
12. ஜனாப் அப்துல் ஹமீத் முகம்மத் மொஹிதீன்
13. ஜனாப் முகம்மத் மாலிக் சித்தீக்
14. ஜனாப் அஹமத் கபீர் முகம்மத் அலி
15. ஜனாப் மீரா சாஹிப் கல்பிகார் முகம்மத்
16. ஜனாப் அப்துல் ஹசன் முகம்மத் பZஸ்லி
17. ஜனாப் அப்துல் ரஸாக் முகம்மத் ஜிப்ருள் ரஸாக்

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.